# சாகித்ய அகாடமி சார்பில் கிராமிய நிகழ்ச்சி



கலிதீர்த்தாள்குப்பம் காமராசர் கலைக்கல்லூரியில் சாகித்ய அகாடமி சார்பில் நடந்த கிராமிய நிகழ்ச்சியில் கல்லூரி முதல்வர் கனகவேல் பேசினார்.

புதுச்சேரி, மே 5-

புதுச்சேரி கலிதீர்த்தாள் குப்பம் பெருந்தலைவர் காமராசர் கலைக்கல்லூரியில் சாகித்திய அகாடமி சார்பில் கிராமத்து மக்களிடம் மானுடம் போற்றும் இரு கவிஞர்களின் தாக்கம் என்ற தலைப்பில் கிராமிய நிகழ்ச்சி நடந்தது. தமிழ்த்துறை தலைவர் சரவணன் வரவேற்றார். கல்லூரி முதல்வர் கனகவேல் தலைமை தாங்கினார். சாகித்ய அகாடமி பொதுக்குழு உறுப்பினர் பூபதி கருத்துரை வழங்கினார். தமிழ்த்துறை பேராசிரியர் அன்புச்செல்வன் வாழ்த்துரை வழங்கினார்.

இந்நிகழ்வில் காஞ்சி மாமுனிவர் பட்ட மேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சி மையத்தின் பேராசிரியை சுஜாதா கலந்து கொண்டு பாவேந்தரும் பெண் உரிமையும் என்ற தலைப்பிலும், வில்லியனூர் கஸ்தூரிபா மகளிர் கல்லூரி பேராசிரியர் விவேகானந்த தாசன் மானுடம் போற்றும் பாவேந்தர் படைப்புகள் என்ற தலைப்பிலும், புதுவை பல்கலைக்கழக சமுதாய கல்லூரி பேராசிரியை மாலதி சிறார் இலக்கியத்தில் ம.இலெ. தங்கப்பா என்ற தலைப்பிலும், பெருந்தலைவர் காமராசர் கலை கல்லூரி பேராசிரியை சவுந்தரவள்ளி இயற்கை ஆர்வலர் ம.இலெ. தங்கப்பா என்ற தலைப்பிலும் கருத்துக்களை வழங்கினர். தமிழ் ஆலோசனைக் குழு உறுப்பினர் அரங்க.முருகையன் நன்றி கூறினார்.